2025 செப்டம்பர் மாதம் 24 – ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

O.S. நெம்பர் : 271/2021

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 – ஆம் தேதி புதன்கிழமை வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1–வது நபரின் வாக்குமூலம்

(1969–ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.L.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW1 – ஏஞுசல்மேரி |
| கணவர் பெயர்: | சவரிமுத்து |
| ஊர்: | சிந்தலைச்சேரி |
| வட்டம்: | உத்தமபாளையம் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | இல்லத்தரசி |
| வயது : | 61 |

24.09.2025

**(சாட்சி ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டார்).**
**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.**

**முதல் விசாரணை**–

நான் இந்த வழக்கில் வாதியாவேன். வழக்கு விபரங்கள் குறித்து நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை வாதி தரப்பு சாட்சியமாக ஏற்க வேண்டுகின்றேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன் அவற்றை வாதி தரப்பு சான்றாவணங்களாக ஏற்றுக்கொள்ள வேண்டி பிரார்த்திக்கிறேன்.

| | |
|---|---|
| 1. | 10.04.2019 ம் தேதியிட்டு பிரதிவாதிகள் என்னிடம் ரொக்கம் ரூ.12,50,000/– கடனாக பெற்றுக்கொண்டதற்கு ஆதரவாக எழுதிக்கொடுத்த தாவா கடனுறுதிச்சீட்டு அசல் (பின்பக்கம் எவ்வித மேலெழுத்தும் கிடையாது) – **வா.சா.ஆ.1** |
| 2. | 10.04.2019 ம் தேதியிட்டு பிரதிவாதிகள் என்னிடம் ரொக்கம் ரூ.12,50,000/– கடனாக பெற்றுக்கொண்டதற்கு ஆதரவாக எழுதிக்கொடுத்த தாவா கடனுறுதிச்சீட்டு அசல் (பின்பக்கம் எவ்வித மேலெழுத்தும் கிடையாது) – **வா.சா.ஆ.2** |

| | |
|---|---|
| 3. | 12.05.2021ம் தேதியிட்டு 1ம் பிரதிவாதி அவரது வழக்கறிஞர் மூலம் எனக்கும், பிரேம்குமார், பிரபா ஆகியோர்களுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அசல் – **வா.சா.ஆ.3** |
| 4. | 06.10.2021ம் தேதியிட்டு நான் எனது வழக்கறிஞர் மூலம் 1ம் பிரதிவாதியின் வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பின் அலுவலக நகல், அஞ்சலக இரசீதுடன் அசல் (எண்ணம் 1) – **வா.சா.ஆ.4** |
| 5. | 09.08.2021ம் தேதியிட்டு 1ம் பிரதிவாதியின் சகோதரர் ஜான்சன் என்பவர் அவரின் வழக்கறிஞர் மூலம் எனக்கும், பிரேம்குமார் என்பவருக்கும் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அசல் – **வா.சா.ஆ.5** |
| 6. | 06.10.2021ம் தேதியிட்டு நான் எனது வழக்கறிஞர் மூலம் ஜான்சன் என்பவரின் வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு அலுவலக நகல், அஞ்சலக இரசீதுடன் – **வா.சா.ஆ.6** |
| 7. | 25.10.2012ம் தேதியிட்டு 1ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயரிலுள்ள பதிவு பாகவிடுதலை பத்திரம் அசல் (ஆவண எண்.3352/2012) – **வா.சா.ஆ.7** |
| 8. | 06.10.2021ம் தேதியிட்டு நான் எனது வழக்கறிஞர் மூலம் 1, 2 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பின் அலவலக நகல், இரண்டு அஞ்சலக இரசீதுடன் – **வா.சா.ஆ.8** |
| 9. | 06.10.2021ம் தேதியிட்டு நான் 1, 2 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பினை அவர்கள் பெற்றுக்கொண்டதை காட்டக்கூடிய Postal Track Consignment கணினி நகல் (4 தாள்கள் அடங்கியது) – **வா.சா.ஆ.9** |

நான் பிராதில் கோரியவாறு தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்க வேண்டி பிரார்த்திக்கிறேன்.

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**:– பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 24.09.2025 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.09.24 18:12:29 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி (FAC), தேனி.
24.09.2025.